ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/62 - 2018 අප්‍රේල් මස 06 වැනි සිකුරාදා - 2018.04.06

*2065/62 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன அதிகாரங்களைச் செயற்படுத்தல் தொடர்பான நியதிச் சட்டம்*

*கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடும் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவன அதிகாரங்களைச் செயற்படுத்தல் தொடர்பான நியதிச் சட்டம் 2017.09.19 ஆந் திகதி மேல் மாகாண சபையின் அங்கீகாரத்தின் பின்னர் 2017.10.19 ஆந் திகதி மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அந்த நியதிச் சட்டம் 2017.10.19 ஆந் திகதியிலிருந்து மேல் மாகாணத்தினுள் செயற்படும் என்பதை இங்கு அறிவிக்கின்றேன்.*

இசுர தேவப்பிரிய,<br>
முதல் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பொறியியல் சேவை,<br>
சட்டம் மற்றும் சமாதானம், உள்ளூராட்சி மற்றும் நிர்வாகம்,<br>
பொருளாதார ஊக்குவிப்பு, மின்சாரம் மற்றும் எரிசக்தி சக்தி,<br>
சுற்றாடல் அலுவல்கள், நீர் வடிகாலமைப்பு மற்றும்<br>
நீர் விநியோகம் மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அமைச்சர்,<br>
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண உள்ளூராட்சி நிர்வாக அமைச்சு,<br>
'சிராவஸ்தி மந்திரய',<br>
கொழும்பு 07,<br>
2018, ஏப்பிறல் 04.

**மேல் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகாரங்களை செயற்படுத்துவதற்கான நியதிச் சட்டம்**

*மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமை தொடர்பு காரணமாக எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடு ஒன்று தொடர்பாக ஆயத்தமாகும் காணி மற்றும் காணி உப பிரிவுகளுக்கு தொடர்பாக திட்டமிடல்கள், சகல நிர்மாண திட்டங்களை அனுமதித்தலும் அது தொடர்பாக வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடு மற்றும் நகர, கிராம நிர்மாண கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடு நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகவும் அதற்கு இடைநேர்விளைவான விடயங்கள் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனத்துக்கு அதிகாரங்கள் தீர்மானம் செய்தல் தொடர்பாகவும் ஏற்பாடு உருவாக்குதல் தொடர்பான நியதிச் சட்டமாகும்.*

1A - PG 3982 — 08 (2018/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த நியதிச் சட்டம் 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தம்) சட்டத்தின் திருத்தப்பட்ட தேசிய அரச சபையில் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவில் (1), (2), (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுக்கும் பொருத்தமற்றதாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபை இவ்வாறு சட்டமாக்குகின்றது.

சுருக்கப் பெயர் மற்றும் செயற் படும் திகதி.

இந்த நியதிச் சட்டம் மேல் மாகாணத்தின் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவன அதிகாரங்களை செயற்படுத்துவது தொடர்பான நியதிச் சட்டம் என அறிமுகமாவதோடு அது ஆளுநரினால் அனுமதி பெற்றதிலிருந்து செயற்படும்.

நியதிச் சட்டத்தின் நோக்கம்.

1. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கம் கீழ்க்குறிப்பிட்டவாறானது :-

(i) உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசத்தினுள் வதிவிட, தொழில்நுட்ப, வாணிப குறிக்கோள்கள் தொடர்பாக காணிகள் மற்றும் காணிகள் உப பிரித்தல் பகுதித் திட்டங்கள், கட்டட நிர்மாண திட்டங்கள் அல்லது வேறு எந்தவொரு அபிவிருத்தி செயற்திட்டத்திற்கும் உரிய திட்டங்கள், உள்ளூராட்சி நிறுவனம் அல்லது அதன் நகர முதல்வர், தலைவர் மூலம் அனுமதித்தல், பரிசோதித்தல் மற்றும் தேவையான வரையறைகள் செய்தல்.

(ii) உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசத்தினுள் வதிவிட, தொழில்நுட்ப, வாணிப குறிக்கோள்கள் தொடர்பாக காணிகள் மற்றும் காணிகள் உப பிரிவுகளுக்குரிய திட்டங்கள், கட்டட நிர்மாண திட்டங்கள், அல்லது வேறு எந்தவொரு அபிவிருத்திக்கும் உரிய திட்டங்கள் உள்ளூராட்சி நிறுவனம் அல்லது அதன் நகர முதல்வர், தலைவர் மூலம் அனுமதித்தல், பரிசோதித்தல் மற்றும் தேவையான வரையறை செய்வதற்கு உரிய எழுத்துச் சட்டம் நிச்சயிக்கப்படுதல்.

(iii) உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசத்தினுள் வீடமைப்பு மற்றும் நகர, அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் மற்றும் நகர, கிராம அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் செயற்படுத்துவது தொடர்பாக ஏற்பாடு செய்தல்.

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்தல்.

2. மேல் மாகாணத்தினுள் எந்தவொரு உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசத்தினுள் வதிவிட, தொழில்நுட்ப, வாணிப பகுதிகள் தொடர்பாக, உபயோகித்தல் தொடர்பாக காணிப்பகுதி அல்லது காணி உப பிரிவுகளுக்கு உரிய திட்டமொன்று நிரந்தரமான நிர்மாணத்துக்கு உரிய கட்டட திட்டம் அல்லது அவ்வாறான திட்டத்திற்கு உரிய திருத்தமொன்று அல்லது வேறு எந்தவொரு அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு உரிய திட்டமொன்று, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப உள்ளூராட்சி நிறுவனத்துக்கு, நகர முதல்வருக்கு, தலைவருக்கு அனுமதிப்பதற்கு, செயற்படுத்துவதற்கு அல்லது அதற்குரிய கட்டளை செய்வதற்கு அல்லது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்படுத்துதல், பணிகள் நிறைவேற்றுதல் அல்லது நடவடிக்கை எடுத்தல், தடுக்கின்ற தேசிய அரச சபை 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட எந்தவொரு ஏற்பாடு ஒன்று அல்லது அதன்கீழ் செய்யப்படுகின்ற எந்தவொரு கட்டளை மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்படுத்துதல் இந்த நியதிச் சட்டம் செயற்படுத்துகின்ற திகதியில் அதிகாரம் இல்லாமல் ஆக்கப்படுகின்றது.

3. இந்த நியதிச் சட்டம் செயற்படுத்தப்படும் திகதிக்குப் பிறகு மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசத்தினுள் காணிப்பகுதிக்கு அல்லது காணி உப பிரிவுக்கு உரிய திட்டமொன்று, நிரந்தர கட்டடமொன்றை கட்டி எழுப்புவதற்கு உரிய கட்டட திட்டமொன்று அல்லது அவ்வாறான திட்டத்திற்கு உரிய திருத்தமொன்று அல்லது வேறு எந்தவொரு அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு உரிய திட்டமொன்றை அனுமதித்தல், அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்குதல், பொருத்தமான சான்றிதழ் ஒன்று வழங்குதல், அனுமதி இல்லாமல் கட்டி எழுப்புதல் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான பணிகள் உள்ளூராட்சி நிறுவனங்களின் நகர முதல்வர், தலைவர், வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பொருத்தமாக செயற்படுத்த வேண்டும்.

4. (i) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் நோக்கத்திற்கு உரிய ஏற்பாடு செயற்படுத்துவதற்கு உரிய எந்தவொரு காரணமொன்று தொடர்பாக அமைச்சர் மூலம் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் சட்டவிதி உருவாக்க முடியும். சட்டவிதி உருவாக்கம்.

(ii) அமைச்சர் மூலம் உருவாக்கப்பட்ட சகல சட்டவிதியும் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட எதிர்வரும் தினத்திலிருந்து செயற்படுத்தப்படல் வேண்டும்.

(iii) அமைச்சர் மூலம் தயாரிக்கப்பட்ட சட்டவிதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பின்பு மூன்று மாதத்தினுள் அனுமதி தொடர்பாக மாகாண சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். மாகாண சபை அந்த சட்ட விதியை அனுமதித்து அந்த அனுமதி தொடர்பாக வர்த்தமானப் பத்திரிகையொன்றின் மூலம் அறிவித்தல் செய்ய வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்படாவிட்டால் அது தொடர்பாக வர்த்தமானப் பத்திரிகையொன்றின் மூலம் அறிவித்தல் செய்ய வேண்டியதுடன் அந்த தினத்திலிருந்து அந்த விதி, அதன்கீழ் இதுவரை எடுக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு பாரபட்சமின்றி வலுவிழக்கச் செய்யப்பட்டதாக கவனிக்கப்படல் வேண்டும்.

செயல் தொடர்பாக குறிப்பாக பொருள் கோடல் தேவை ஏற்படுமானால் இந்த நியதிச் சட்டத்தின்- பொருள் கோடல்.

“உள்ளூராட்சி நிறுவனம்” என்பது, மேல் மாகாணத்தின் பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்று உத்தேசிக்கப்படுகின்றது.

“தலைவர்” என்பது, நகர சபை அல்லது பிரதேச சபையிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைவர் என்று உத்தேசிக்கப்படுகின்றது.

“நகர முதல்வர்” என்பது, மாநகர சபைக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள நகர முதல்வர் என்று உத்தேசிக்கப்படுகின்றது.

“அமைச்சர்” என்பது, மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்று உத்தேசிக்கப்படுகின்றது.

இந்த நியதிச் சட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி சொற்றொடர்களுக்கிடையில் ஏதாவது பொருத்தமற்ற தன்மை ஏற்பட்டால் சிங்கள மொழிச் சொற்றொடர் பலம் பொருந்தியதாக இருக்கும்.

*04-790*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.